இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

**நீர்பாசன அமைச்சு**

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்

# விலைமனுக்கோரல்

## சிற்றுண்டிச்சாலை நடாத்தி செல்லல்

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் சார்பாக கனிஷ்ட கொள்முதல் குழுவின் தலைவரினால், இல-415, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 07, இல் அமைந்துள்ள மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலையை ஒரு வருட காலத்திற்கு நடாத்திச் செல்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் ஹோட்டல் அல்லது உணவகத்தை நடாத்திச் சென்றமைக்கான குறைந்தபட்சம் ஒரு (1) வருட அனுபவத்தினை கொண்டிருக்க வேண்டும்.

2. 500 க்கும் அதிகமான அலுவலக ஊழியர்களை கொண்டிருத்தல் வேண்டும்.

3. தேசிய அடையாள அட்டையின் நகல் மற்றும் மீளச் செலுத்தப்படாத கட்டணத் தொகையாக **ரூ.500.00** (ஐநூறு ரூபாய்) பணமாக 2021.11.15 ஆம் திகதி முதல் 2021.12.02 ஆம் திகதி வரை 15.00 மணிவரையான காலப்பகுதிக்குள் இல-415, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 07 இல் அமைந்துள்ள மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் காசாளரிடம் பணம் செலுத்திய இரசீதினை சமர்ப்பித்த பின்னர், கொள்முதல் அதிகாரியிடம் மனு ஆவணத்தினைக் பெற்றுக்கொள்ள முடியும்.

4. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் அனுபவச் சான்றிதழ்கள், ஆவணங்கள் மற்றும் பணியகத்திற்கு பணம் செலுத்தியதற்கான இரசீது உட்பட, மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடுதல் அல்லது மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் கனிஷ்ட கொள்முதல் குழுவின் தலைவருக்கு கிடைக்கும் வகையில் **2021.12.03 ஆம் திகதி 14.00** மணித்தியாலங்களுக்கு முன்னர் பதிவுதபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது முடிவடைந்த உடனே அவ்விடத்தில் பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், வழங்குனர் அல்லது அவர் நியமிக்கும் ஒருவருக்கு அச்சந்தர்ப்பத்தில் பங்கெடுக்க அனுமதி வழங்கப்படும்.

5. மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து **2022.03.03** ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் செல்லுபடியாகும்.

6. எந்த மனுவினையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமையை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் கனிஷ்ட கொள்முதல் குழு கொண்டுள்ளது.

7. கேள்வி விண்ணப்பம் இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை நடாத்தி செல்லல்" எனக் குறிப்பிடல் வேண்டு

8. தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை பராமரிப்பாளரினால் சிற்றுண்டிச்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்னதாக மீள்தெலுத்தப்படும் பாதுகாப்பு கட்டணத் தொகையாக **ரூ.25,000.00** பணியகத்தில் பணமாகச் வைப்பிலிடப்பட வேண்டும்.

9. மேலதிக விபரங்களை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் கொள்முதல் அலுவலரிடம் சாதாரண வார நாட்களில் அல்லது 011-2668821 எனும் தொலைப்பேசியினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**சிரேஷ்ட கொள்முதல் குழு,**
**பொறியியல் விவகாரங்களுக்கான மத்திய ஆலோசனைப் பணியகம்.**
**இல 415, பௌதாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**